# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அனைத்துலகத் தேர்வு

## 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. இலங்கையில் தமிழ்ச் சிற்றரசுகள் ஆட்சி புரிந்த இடங்களில் ஒன்று

அ) பெரியபுளியங்குளம் ☐ ஆ) இரணைமடுக்குளம் ☐
இ) கந்தளாய்க்குளம் ☐ ஈ) சேந்தான்குளம் ☐

2. மரத்தில் இருந்த பழங்கள் ____________ என உதிர்ந்தன.

அ) பொலு பொலு ☐ ஆ) குளுகுளு ☐
இ) சிலுசிலு ☐ ஈ) வழுவழு ☐

3. 'காய்கதிர்ச் செல்வனே' என அழைக்கப்படுவது

அ) கதிரவன் ☐ ஆ) நிலா ☐
இ) உடு ☐ ஈ) வானம் ☐

4. அஞ்சல் எழுதும்போது மேன்மைக்குரியோரை விளித்து எழுதப்படுவது

அ) அன்புடையீர் ☐ ஆ) அன்பார்ந்த ☐
இ) மேதகு ☐ ஈ) ஐயா ☐

5. "குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்" என்று பாவேந்தர் குறிப்பிடுவது

அ) வடவரை ☐ ஆ) வீடணனை ☐
இ) இராவணனை ☐ ஈ) புலவர்குழந்தையை ☐

6. ஆவினங்கள்

அ) கனைத்தன ☐ ஆ) கதறின ☐
இ) முழங்கின ☐ ஈ) சீறின ☐

7. இலங்கை சோழரின் ஆட்சியுடன் இணைந்திருந்த காலம்

அ) 70 ஆண்டுகள் ☐ ஆ) 80 ஆண்டுகள் ☐
இ) 50 ஆண்டுகள் ☐ ஈ ) 90 ஆண்டுகள் ☐

8. இராமாயணத்தைப் பாடிய வடநாட்டுப் புலவன்

அ) கம்பன் ☐ ஆ) பாரதியார் ☐
இ) தாகூர் ☐ ஈ ) வான்மீகி ☐

9. 'ஓடிடும் தமிழா' என்ற பாடலை எழுதியவர்

அ) அம்பி ☐ ஆ) உதயை வீரையன் ☐
இ) இரவி ☐ ஈ ) இளந்திரையன் ☐

10. "நீண்ட நீண்ட காலம் நீ நீண்டு வாழ வேண்டும்" என்ற பாடல்

____________ ப் பாடலாகும்.

அ) பொங்கல் வாழ்த்து ☐ ஆ) திருமண வாழ்த்து ☐
இ) பிறந்தநாள் வாழ்த்து ☐ ஈ ) புத்தாண்டு வாழ்த்து ☐

11. செயப்படுபொருளை உணர்த்துவது

அ) 1 ஆம் வேற்றுமை ☐ ஆ) 2 ஆம் வேற்றுமை ☐
இ) 8 ஆம் வேற்றுமை ☐ ஈ ) 6 ஆம் வேற்றுமை ☐

12. பண்புத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பவளவாய் ☐ ஆ) ஓரிறைவன் ☐
இ) கத்திகோடரி ☐ ஈ ) ஓடுநீர் ☐

13. மாநாய்கன் என்பவன் ____________________ தந்தை

அ) கண்ணகியின் ☐ ஆ) மாதவியின் ☐

இ) கோவலனின் ☐ ஈ) மணிமேகலையின் ☐

14. புரந்தனன் என்ற சொல்லின் பொருள்

அ) காத்தனன் ☐ ஆ) புரிந்தவன் ☐

இ) புரிதல் ☐ ஈ) பரிந்தனன் ☐

15. யாழ்நூலகம் எரியூட்டப்பட்ட ஆண்டு

அ) 1954 ☐ ஆ) 1959 ☐

இ) 1933 ☐ ஈ) 1981 ☐

16. வல்லின மெய்யின் இன எழுத்து

அ) இடையினம் ☐ ஆ) மெல்லினம் ☐

இ) உயிரினம் ☐ ஈ) ஆய்தம் ☐

17. தடுதோல் என்பது

அ) வேல் ☐ ஆ) வாள் ☐

இ) கேடகம் ☐ ஈ) வில் ☐

18. **பழமொழி:** அக்கரைக்கு இக்கரை பச்சை என்பதன் கருத்து

அ) பேராற்றலும் தோற்கும் ☐

ஆ) இணைவின் பயன் ☐

இ) போலித்தோற்றம் ☐

ஈ) எதற்கும் எல்லையுண்டு ☐

19. "முன்றிலிற் குரவையாட்டம் முடுக்கி லிசைப்பாணீட்டம்.." இதில் முன்றில் என்பது

அ) சந்தி ☐ ஆ) முற்றம் ☐
இ) அரங்கு ☐ ஈ) மூன்று ☐

20. வயிறு + பசி

அ) வயிறுப்பசி ☐ ஆ) வயிறுபசி ☐
இ) வயிற்றுப்பசி ☐ ஈ) வயிறைபசி ☐

21. இலங்கை கடற்கோளினால் உடைந்து தனித்தீவாகுமுன் இருந்த நிலப்பரப்பு

அ) ஈரான் ☐ ஆ) ஈராக் ☐
இ) பர்மா ☐ ஈ) இந்தியா ☐

22. நாற்றை நெருக்கி நட்டால் விளைச்சல்

அ) பெருகும் ☐ ஆ) குறையும் ☐
இ) அழியும் ☐ ஈ) விளையாது ☐

23. இயல்புப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு

அ) நீலவானம் ☐ ஆ) மாம்பழம் ☐
இ) குழலோசை ☐ ஈ) பந்தாட்டம் ☐

24. தன்முடியையும் செல்வங்களையும் இலங்கையில் அடைக்கலமாக வைத்தவன்

அ) இராசராசன் ☐ ஆ) இராசசிம்மன் ☐
இ) பராந்தகன் ☐ ஈ) இராசேந்திரன் ☐

25. பூவலடி என்பது

அ) ஊர்க்கிணறு ☐ ஆ) பூந்தோட்டம் ☐
இ) வயல் ☐ ஈ ) குளம் ☐

26.அடுக்கு மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) காலங்காலமாக ☐ ஆ) எலும்பும்தோலும் ☐
இ) பொல பொல ☐ ஈ ) செக்கச்சிவந்த ☐

27. பாண்டியரின் உறவு முறையோர்

அ) பாண்டியரும் பல்லவரும் ☐ ஆ) சேரரும் சோழரும் ☐
இ) பல்லவரும் சோழரும் ☐ ஈ ) சேரரும் பல்லவரும் ☐

28. முன்னிலைப் பன்மை

அ) ஓடுகின்றோம் ☐ ஆ) ஓடினர் ☐
இ) ஓடினீர்கள் ☐ ஈ ) ஓடின ☐

29. சுண்டல் உண்டான். இச்சொல்லியம்

அ) தொழிலாகுபெயர் ☐ ஆ) குணவாகுபெயர் ☐
இ) சினையாகுபெயர் ☐ ஈ ) பொருளாகுபெயர் ☐

30. விண்ணைமுட்டும் வளமனைகள்

அ) தற்குறிப்பேற்ற அணி ☐ ஆ) உவமையணி ☐
இ) உயர்வுநவிற்சி அணி ☐ ஈ ) உருவகவணி ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இனவழிப்புப் போரினால் வாழ்க்கையில் நாம் பட்டதுயர்கள் எக்காலத்திலும் நம் மண்ணிலிருந்து இலகுவில் மறைந்து போகாது. முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் ஓராயிரம் வலிகளைச் சுமந்த இனம் தமிழினம். அக்கால கட்டத்தில் போராளி ஒருவர் சிங்களப்படையினரிடம் சரணடைந்து தங்கியிருந்தார். அவருடன் மேலும் பல போராளிகள் தங்கியிருந்தனர். அப்பொழுது ஒரு நாள் ஒரு பெண் படையினரைப் பார்த்து, "அண்ணாவுக்கு மதிப்புக்கொடுங்கோ ! இல்லையென்றால் எவரும் உயிருடன் இருக்கமாட்டீர்கள்" என்று தாறுமாறாக ஏசிக்கொண்டிருந்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் போராளிக்கு அதிர்ச்சியாக இருந்தது. சிங்களப்படையினரிடம் ஒரு பெண் எப்படித் துணிச்சலாகப் பேசுகின்றாள். இத்துடன் இவளின் கதையே முடியப் போகின்றது என எண்ணி அருகில் இருந்தவரிடம் அவளைப் பற்றிக் கேட்டார். அவர் கூறியதைக் கேட்டு அப்போராளி அதிர்ச்சியடைந்தார். அவள் ஒரு பெண் போராளி. இறுதிப்போரின்போது சிங்களப்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டாள். அன்றிலிருந்து மனநிலை தாக்கப்பட்டவளாக அலைந்து திரிகிறாள். "அண்ணாவுக்கு மதிப்புக்கொடுங்கோ" என்ற சொற்கள் மட்டுமே அவள் வாயிலிருந்து அடிக்கடி வரும். இவ்வாறு சரணடைந்து அல்லற்படும் போராளிகளின் கதைகள்தான் எத்தனை ! எத்தனை !

1. இனவழிப்பின் இறுதிப்போர் நடைபெற்ற இடம் எது ?

______________________________________________

______________________________________________

2. பெண் போராளி யாரை ஏசிக் கொண்டிருந்தாள்?

______________________________________________

______________________________________________

3. முள்ளிவாய்க்காற் போரில், பெரும் வலிகளைச் சுமந்த இனம் எது?

______________________________________________

______________________________________________

4. இறுதிப்போரின் போது பெண்போராளி யாரால் சிறைப்பிடிக்கப்பட்டாள்?

______________________________________________

______________________________________________

5. இப்பந்தியில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

### 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. நாட்டுப்புற மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகள் எவற்றோடு இணைந்தவை?

2. இலங்கைத் தமிழர், தமிழ்நாட்டுடன் ஒற்றுமை கொண்டிருந்தமைக்கான காரணங்கள் எவை ?

3. தமிழரின் நானில வாழ்வின் அலகுகள் மூன்றையும் தருக.

4. மும்முடிச்சோழமண்டலம் என அழைக்கப்பட்ட நாடு எது? பொலநறுவ யாருடைய ஆட்சிக்காலத்தில் புதிய தலைநகராக மாற்றப்பட்டது?

5. இராமாயணம் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?

6. கண்ணகி விண்ணுலகம் அடைந்த நாடு எது?

7. "நல்லரசு இல்லா நாட்டிலும் கொல்புலி வாழும் காடு நன்று". இதன் பொருள் யாது?

புள்ளிகள் 10

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



நன்மை தந்திடும் நண்பனின் நட்பு !
நான் வாழ உதவிடும் இனிய நட்பு !

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வெற்றிலை | ______________ | புற்றரை | ______________ |
| பொற்கிழி | ______________ | ஐந்தறம் | ______________ |
| காட்டுமரம் | ______________ | மின்னொளி | ______________ |

2. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

உவமைத் தொடர் ______________

உயிர்முன் மெய்புணர்தல் ______________

இடைத்தொடர்க் குற்றியலுகரம் ______________

3. பின்வருவனவற்றின் விகுதிகளை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வந்தாய் | ______________ | இருக்கின்றோம் | ______________ |
| ஓடியது | ______________ | நீந்துகின்றனர் | ______________ |
| அறிஞன் | ______________ | எழுதுவான் | ______________ |

4. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

வினையாலணையும் பெயர் ______________

அடுக்கிடுக்குத்தொடர் ______________

இணைமொழி ______________

பொதுமொழி ______________

இடுகுறிப்பெயர் ______________

மரபுவழு ______________

5. **குலை** என்ற சொல், பெயராகவும் வினையாகவும் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர் ______________________________

வினை ______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

வேற்றுமையில் ஒற்றுமை என்னும் உணர்வு நம் உள்ளத்தில் இருந்தால் தான் நாம் ஒற்றுமையாக வாழமுடியும். இன்று ஒற்றுமையின்மை எம்மிடையே அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அதனாலேதான், நாம் இன்று பல இன்னல்களைச் சுமந்து கொண்டேயிருக்கின்றோம். ஒற்றுமை என்னும் பண்பாடு இளைஞர்கள் உள்ளத்தில் வேரூன்ற வேண்டும். அதற்கு முதியோர்கள் வழிகாட்டவேண்டும். இனம், மதம், மொழி என்ற வேறுபாடின்றி நம்மில் பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடின்றி நாம் வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்ற பாரதியின் கூற்றை நினைவில் வைத்துக்கொண்டு நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். தமிழராகிய நாம் நீண்டகால வரலாற்றையுடைய ஓர் உயர்ந்த இனம். ஆனால் "எங்களுக்கென்று ஒரு நாடு இல்லை. நாம் அனைவரும் அதற்கான இலக்கை நோக்கித் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றோம். அதில் வெற்றி பெறவேண்டும்" என்ற துடிப்பில் பலர் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே, நாம் ஒற்றுமையுடன் செயற்படுவோமேயானால், எமக்கான விடிவு வெகு தொலைவில் இல்லை.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இலங்கை - தென்னிந்திய அரசியல் உறவுகள்.

- எதிர்காலத்தில் புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி.
    - தமிழ்மொழி கற்பிக்கும் நாடுகள்.
    - தமிழ்க்கல்வியின் இன்றைய நிலை.
    - தமிழ்மொழிக் கல்வியின் பயன்கள்.
    - எதிர்காலத்தில் தமிழ் கற்காவிடின் ஏற்படும் விளைவுகள்.

- உம்மால் மறக்க முடியாத நிகழ்வு.

புள்ளிகள் 20